பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

மலர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 20 செவ்வாய்க்கிழமை (05-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 262

# பாடசாலைகளைத் திறக்கக் கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி

## மாணவர் கல்வி பாதிப்பு குறித்து ஜனாதிபதிக்கு மகஜர்

வவுனியா, நவம்பர் 5

வன்னியில் இருந்துவரும் அகதிகளைத் தங்க வைப்பதற்காக வவுனியாவில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு மூடப்பட்டுள்ளன அல்லவா? இதனை ஆட்சேபித்து வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. ஊர்வலம் முடிவில் ஜனாதிபதிக்கு அனுப்பப்படுவதற்காக மகஜர் ஒன்றும் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ரகுநாதபிள்ளையிடம் கையளிக்கப்பட்டது.

பெற்றோர்கள், மாணவர்களும் —

மற்றும் அரசியல் கட்சிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பொது நிறுவனங்களும் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ரம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமானது.

ஊர்வலம் வவுனியா கச்சேரியை அடைந்து அங்கு வைத்து மேலதிக அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

மூடப்பட்ட பாடசாலைகள் உடனடியாகத் திறக்கப்பட வேண்டும் என்று ஊர்வலத்தில் சென்றோர் கோரிக்கை விடுத்தனர். மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் வவுனியாவுக்கு விஜயம் செய்த வடமாகாண புனர் வாழ்வு புனர் நிர்மாண அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீர தலைமையில் நடைபெற்ற மாநாட்டிலேயே பாடசாலைகளை மூடும் முடிவு எடுக்கப்பட்டது.

ஏற்கனவே எட்டுப் பாடசாலைகளில் சுமார் 10 ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளனர்.

மூடப்பட்ட ஏனைய பாடசாலைகளில் அகதிகளை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-10)

## ஜே. ஆரின் இறுதிச் சடங்கு

கொழும்பு, நவ. 5

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இறுதிச் சடங்குகள் களனி ரஜமகா விஹாரைக்கு அருகாமையில் பூரண அரச இராணுவ மரியாதைகளுடன் நேற்று நடைபெற்றன.

ஜே ஆர். ஜெயவர்த்தனா விரும்பிய விதமே அவரின் இறுதிச் சடங்குகள் சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் புத்தபிரான் விஜயம் செய்ததாகக் கருதப்படும் களனி ரஜமகா விஹாரைக்கு அருகில் நடைபெற்றன.

புத்தபிரான் நீராடினார் எனக் கருதப்படும் களனி கங்கையில் அவரின் அஸ்திகள் கரைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## இராணுவ முகாம் மீது புலிகள் மோட்டார் தாக்கு

### மட்டக்களப்பு பகுதியில் சம்பவம்

கொழும்பு, நவ. 5

மட்டக்களப்பு மாவட்டம், இரான் என்றஇடத்தில் உள்ள இராணுவ முகாம் மீது புலிகள் மோட்டார் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு 7-30 மணியளவில் இடம் பெற்றது.

புலிபாய்ந்த கல் என்ற இடத்திலிருந்தே புலிகள் இத் தாக்குதலை நடத்தினர் என்றும் —

இது புலிகளின் பரீட்சார்த்த தாக்குதலாக இருக்கலாமெனவும் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

இத்தாக்குதலின் போது படையினர் தரப்பில் எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## பொலீஸ் காவலரண் மீது அம்பாறையில் தாக்குதல்

### முறியடிக்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, நவ. 5

நேற்று முன்தினம் அதிகாலை அம்பாறை மாவட்ட 12 ஆம் கொலனி பொலீஸ் காவலரணை விடுதலைப் புலிகள் தாக்கினர். எனினும் காவலரணில் இருந்த பொலீஸார் புலிகளின் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பலவிவத்த, வெல்லாவெளி பிரதேசங்களைச் சேர்ந்த விசேட அதிரடிப் படையினரும் புலிகள் மீது பதில் தாக்குதல் நடத்தினர்

பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் புலிகளின் 6 சடலங்களும் 6 தன்னியக்க துப்பாக்கிகளும் கண்டெடுக்கப்பட்டன என்றும் —

துப்பாக்கிகளுடன் 7 மகஸீன்களும் 159 சுற்றுத் தோட்டாக்களும் கண்டெடுக்கப்பட்டன என்றும் —

இந்தச் சம்பவத்தில் ஓர் ஊர்காவற்படை வீரர் கொல்லப்பட்டதுடன் 4 பொலீஸார் காயமடைந்தனர் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

(இ-4)

## மாவீரர் தினத்தை முன்னிட்டு கிழக்கில் பெரும் தாக்குதலுக்கு புலிகள் திட்டம்

### பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, நவ. 5

மாவீரர் தினத்தை முன்னிட்டு கிழக்கில் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தலாமெனவும்—

புலிகளின் எவ்வித தாக்குதலையும் முறியடிக்கக் கூடிய விதத்தில் பாதுகாப்புப் படையினர் தயாராக உள்ளனர் என்றும்—பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன என்று கொழும்பு அரச சார்பு பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

'நவம்பர் 21 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரத்தினை மாவீரர் தினமாக புலிகள் அனுஷ்டிக்க இருக்கின்றனர். அந்த வாரத்தில் கிழக்கில் பல தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர் என இராணுவப் புலனாய்வுகளின் மூலம் அறிய வந்துள்ளது.

எத்தகைய தாக்குதலையும் முறியடிக்க படையினர் தயாராக இருக்கின்றனர்.

இப்படி பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் தாக்குதல்களை மேற்கொள்வதற்காக புலிகளின் ஏராளமான தற்கொலையாளிகள் அங்கு வந்துள்ளார்கள் எனவும்—

அதேபோல் திருகோணமலைப் பகுதிகளிலும் தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர் எனவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## கந்தரோடை பகுதியில் மோதல்

யாழ்ப்பாணம், நவ. 5

கந்தரோடைக்கும் சங்குவேலிக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலின் போது ஏற்பட்ட சேதவிவரங்கள் பற்றி உடன் தெரியவரவில்லை. (இ-4)

## நாவற்குழிச் சம்பவம்: 18 ஆம் திகதி வரை விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

நாவற்குழியில் காணாமற் போய் பின்னர் சடலமாக மீட்கப்பட்ட பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகியோரின் வழக்கு நேற்று யாழ். மாவட்ட பதில் நீதிபதி க. கேசவன் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்குத் தொடர்பான ஆவணங்கள் நீதிவானிடமே உள்ளதால் பதில் நீதிவான் வழக்கை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்குத் தொடர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியில் ஐக்கிய முன்னணி அரசை காங்கிரஸ் தொடர்ந்து ஆதரிக்கும்

### நேற்று நடந்த செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

புதுடில்லி, நவ. 5

மத்தியிலுள்ள ஐக்கிய முன்னணி அரசுக்கு தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்குவதென காங்கிரஸ் கட்சியின் செயற்குழு நேற்றுத் தீர்மானித்தது.

இம்முடிவை காங்கிரஸ் செயலாளர் மாதவ்சிங் சோலங்கி நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஐக்கிய முன்னணிக்கும் காங்கிரஸுக்கும் இடையில் இழுபறி நிலைமை இருந்து வந்ததும் —

மத்தியில் ஐக்கிய முன்னணிக்கு அளித்து வரும் ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை இதனால் எழுந்ததும் தெரிந்ததே.

இத்தகைய நிலையிலேயே காங்கிரஸ் கட்சியின் செயற்குழு நேற்றுக்கூடி தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசைத் தொடர்ந்து ஆதரிப்பது என்று முடிவு செய்தது.

உத்தரப்பிரதேசத்தில் செல்வி மாயாவதி தலைமையில் ஆட்சி அமைப்பதற்கு ஐக்கிய முன்னணி ஆதரவு தரவேண்டும் என்று காங்கிரஸ் கோரி இருந்தது

இதனை ஐக்கிய முன்னணி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி வ. சிவகுமார் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
**சந்திரமணி கணபதிப்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி மிகுந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்,
கைதடி.

(43506)

## கண்ணீர் அஞ்சலி

**திரு. பொன்னையா கேதாரநாதன்**
(B.Sc, Dip. in Ed.)
(முன்னாள் ஆசிரியர், அதிபர் - யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம், வேலணை; முன்னாள் கொத்தணி அதிபர் – வேலணை)

எமது கல்லூரியின் பழைய மாணவரும். நீண்ட கால இரசாயனவியல் ஆசானும், அதிபரும், வேலணை கொத்தணி அதிபருமாகிய திரு பொ. கேதாரநாதன் அவர்கள் 01 - 11 - 1996 அன்று ஆஸ்திரேலியாவில் காலமான துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.


அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சிவகாமி சமேத நடராஜப்பெருமானின் மலர்ப்பாதங் களை அடைந்து நித்தியப் பேரானந்தத்தைப் பெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
யா/ சேர். வைத்தியலிங்கம்
துரைசுவாமி ம; ம. வி.
வேலணை

(43507)

## 31-ம் நாள் நினைவலைகள்



**திரு. வை. சுந்தரலிங்கம்**
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம்)

மலர்வு: **24-03-1936** உதிர்வு: **06-10-1996**

பனியெனப் பாயும் நெஞ்சம் பசுமையாய் வீசும்பார்வை
முனிவிலாமுகமுங் கொண்டீர் முகையவிழ் முறுவல்கண்டீர்
தனியிலா விடைத்தான்தன்னைத் திருத்திடும் போது வெள்ளிக்
குனிநிலா வுடையான்பாதம் கூடினீர் கலங்கினோமே!

நுகருவோர் மாணவர்தம் நுகர்தலின் சுவையைக்கண்டு
நகருமோர் நல்லாசிரியர் நல்லவிஞ் ஞானத்துறையில்
நிகரிலாப் பணிகள்செய்தீர் நும்முயிர் கொழும்புமா(யை)
நகரிலா பிரியவேண்டும் நிழலிலே ஆறுமையா!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள் சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள்

(சி/3468)

## விசேட அ. அட்டை

தென்மராட்சி, நவ. 5
தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 154 பேரின் அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்து சேர்ந்தன. (இ-117)

## தீவுப் பகுதியில் பனை அபிவிருத்தி

பனை அபிவிருத்திச் சபையின் உயர்நிலை அதிகாரிகள் குழு தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்தது.

நெடுந்தீவில் ஒரு பனங்கட்டித்தொழிற்சாலையும், அனலைதீவில் போத்தலில் கள்ளடைக்கும் தொழிற்சாலையும், எழுவைதீவில் பனம்களியில் இருந்து ஜாம், கோடியல் செய்யும் தொழிற்சாலையும் பனை அபிவிருத்திச்சபையினால் நிறுவப்படவுள்ளன. (இ-30)

## மாகோவில் இடவசதி

அடுத்துவரும் ''மாஹோ'' கப்பலில் கொழும்பில் இருந்து பொருள்களைக் கொண்டு வருவதற்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் இடவசதி உள்ளதால் —

கொழும்பில் இருந்து பொருள்களைத் தருவிக்க விரும்பும் தனியார் வர்த்தகர்கள் செயலக புனர்வாழ்வுப் பிரிவிடம் இன்றிலிருந்து 9 ஆம் திகதிக்குள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இத்தினத்திற்குள் கப்பலுக்கான முற்பணத்தைச் செலுத்தி இடவசதியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## சாவகச்சேரியில் எண்ணெய் விநியோகம்

தென்மராட்சி, நவ. 5
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனவு நிலையத்தில் நேற்று முதல் வாகனங்களுக்கு மண்எண்ணெய், டீசல், ஒயில் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

மோட்டார் சைக்கிள், கார், ஆகியவற்றுக்கு மண்எண்ணெயும் லொறி, டிராக்டர் ஆகியவைகளுக்கு டீசலும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## விசர் நாயால் கடியுண்டவர் மரணம்

விசர் நாய்க் கடியினால் ஏற்படும் நோய்க்கு உள்ளான ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மரணமானார்.

கோப்பாய் கட்டைப் பிராயைச் சேர்ந்த சின்னப்பு கருணாமூர்த்தி (வயது 34) என்பவரே மரணமானவராவார்.

விசர் நாயினால் கடியுண்ட இவர் அதற்கான நோய்த் தடுப்பூசி போடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
(இ-15)

## திருநெல்வேலி வாகன விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ 5
திருநெல்வேலி பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் பாதசாரி ஒருவர் படுகாயமடைந்தார்.

திருநெல்வேலியைச்சேர்ந்த நாகலிங்கம் பரஞ்சோதி (வயது 60) என்பவரே படு காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-15)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா கேதாரநாதன்

(முன்னாள் அதிபர், வேலணை - சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா கேதாரநாதன் ஆஸ்திரேலியாவில் சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் திருமகள் (முன்னாள் அதிபர் – சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் — ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புக் கணவரும், மேகலை (லண்டன்), கோசலை (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), யசோதை (சிங்கப்பூர்) திருமகன் (பொறியியலாளர் — ஆஸ்திரேலியா), Dr. சிற்பரன் (ஆதார வைத்தியசாலை, பொலன்னறுவை), தயா (யாழ். மருத்துவபீடம் — ஆஸ்திரேலியா), அநுஷா (கொழும்பு மருத்துவபீடம் — ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேந்திரன் (லண்டன்), மோகனதாசன் (பொறியியலாளர் — ஆஸ்திரேலியா), சுரேஸ் (சிங்கப்பூர்), திருமதி திருமகன் (கணக்காளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
Dr. கே சிற்பரன்

ஆதார வைத்தியசாலை,
பொலன்னறுவை,

(43509)

### சின்னத்தம்பி பொன்னுத்துரை

யாழ்ப்பாணம் பலாலி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை 2-11-96 இல் காலமானார்.

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், திருமதி க. நிர்மலா (பாலராசிரியர் – அரியாலை), சகுந்தலா (பாலராசிரியர் யாழ்), காலஞ்சென்ற பற்குணநாதன் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்) மஞ்சுளா (பாலராசிரியர்-நல்லூர்), சியாமளா (பாலராசிரியர், யாழ்), தர்ஷிலா (யாழ். பல்கலைக்கழகம், இசைக்கலைமணி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லையா, செல்வராசா, தங்கம்மா மற்றும் இராசையா (கொழும்பு), சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ந. கணேசனின் (கொழும்பு) மாமனாரும், செ. இராசையா (அநுராதபுரம்), காலஞ்சென்ற சிவபாக்கியம், அற்புதம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-11-1996 ஆம் திகதி வில்லூன்றி மயானத்தில் நடைபெற்றன என்பதனை அறியத்தருகின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. பூரணம் (மனைவி)
(பிள்ளைகள்)

22(08) பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(43508)

### பத்மநாதன் ரட்ணகுமார்

தெல்லிப்பளை வீமன்காமத்தைச் சேர்ந்த பத்மநாதன் ரட்ணகுமார் (தொழில் நுட்பவியலாளர், ஸ்கைலார்க் நிறுவனம்) 03-11-96 இல் அகால மரணமடைந்தார்.

இவர் துஸ்யந்தியின் அன்புக் கணவரும், பத்மநாதன் (ஓய்வு பெற்ற காட்டிலாகா அதிகாரி), காலஞ்சென்ற ஞானசௌந்தரி ஆகியோரின் அன்பு மகனும், நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுந்தரலிங்கம் — பொன்னம்மா ஆகியோரின் மருமகனும், சுமதி (நோர்வே), பிரேம்குமார் (பொறியியலாளர், நியூசிலாந்து), கீதா (ஆசிரியை, கல்முனை), சுகுணா (இலிகிதர், மன்னார்) ஆகியோரின் சகோதரனும், அசோக்குமார் (நோர்வே), ஜனகன் (ஜேர்மனி) முகுந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (5-11-96) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
துஸ்யந்தி
(மனைவி)

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(43506)

### திருமதி பூமணி காசிப்பிள்ளை

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி காசிப்பிள்ளை 04-11-96 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சாவகச்சேரி பிரபல வெற்றிலைக்கடை உரிமையாளர் அமரர் நா. காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், இராமச்சந்திரன், காலஞ்சென்ற பாலச்சந்திரன், ஞானச்சந்திரன், யோகச்சந்திரன் (நோர்வே), உதயச்சந்திரன் (கனடா), செல்வச்சந்திரன் (சுவிஸ்), பிரின்ஸ் கவிதா (ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு தாயாரும், பவானி, தயாநிதி, குமுதினி, இராசசுலோசனா, கோமதி, சுபத்திரா, மோகனதாஸ் ஆகியோரது அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கற்குளி இல்லத்தில் இன்று (5-11-96) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. இராமச்சந்திரன்
(மகன்)

கற்குளி வடக்கு,
சாவகச்சேரி:

(சி/3466)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் நகரங்களில் முழு அளவில் உஷார் நிலை

## தற்கொலைத் தாக்குதல் எச்சரிக்கை

ஜெருஸலம் நவ. 5

ஜெருசலமும் மற்றும் இஸ்ரேல் நகரங்களும் தற்கொலைத் தாக்குதலை எதிர்பார்த்து முழு அளவில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பலஸ்தீனரின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் மேற்குக் கரையில் இருந்து பலஸ்தீன தற்கொலைப் படையாளி ஒருவர் இஸ்ரேலுக்குள் நுழைந்து விட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்து வருவதை அடுத்து எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் நேற்று சிரியாவுக்கு விஜயம் செய்தார். சிரிய ஜனாதிபதி ஹபேஸ் அல் அஸாத் அவரை டமாஸ்கஸ் விமான நிலையத்தில் வரவேற்றார்.

யூதக் குடியிருப்புக்கள் தொடர்பாக இஸ்ரேல் தற்போது கடைப்பிடிக்கும் விட்டுக் கொடுக்காத நிலை குறித்து எகிப்து அதிருப்தி கொண்டுள்ளது. (இ)

## பஞ்சாப் மாகாண அரசை கலைத்தது சட்ட விரோதம்

### பாக். நீதிமன்றம் தீர்ப்பு

லாகூர். நவ. 5

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண அரசு பிரதமர் பெனாஷிர் பூட்டோவின் பரிந்துரைப்படி குடியரசுத் தலைவரால் கலைக்கப்பட்டது.

இந்தச் செயல் சட்ட விரோதமானது என லாகூர் நீதிமன்றம் கடந்த ஞாயிறன்று தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பானது பெனாஷிர் பூட்டோவுக்கு அரசியல் ரீதியில் பெரும் பின்னடைவு என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ-10)

## பாகிஸ்தானுக்குப் பதிலடி; அப்துல்லா எச்சரிக்கை

காஷ்மீர் மாநிலத்தை தமது படைப்பலம் மூலம் இணைக்க பாகிஸ்தான் முனைந்தால் அதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தானே காஷ்மீரில் தீவிர வன் செயல்களைத் தூண்டிவிடுவதாக அவர் பிரிட்டிஷ் தூதுக் குழு ஒன்றிடம் கூறினார்.

பாகிஸ்தான் மறைமுகமான போரில் ஈடுபட்டுள்ளது என்றும் காஷ்மீர் மக்கள் அதற்கு ஒருபோதும் உதவமட்டார்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-3)

## உத்தரப் பிரதேசத்தில் அரசு அமைக்க கட்சிகள் முனைப்பு

லக்னோ, நவ 5

உத்தரப் பிரதேசத்தில் அரசாங்கம் அமைக்க வெவ்வேறு அரசியல் கட்சிகள் முனைப்பாக முயன்று வருகின்றன.

பாரதிய ஜனதாக்கட்சி விரைவிலேயே அரசு அமைக்கும் என்றும், பலர் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் பாரதிய ஜனதாத் தலைவர் எல். கே. அத்வானி தெரிவித்தார்.

அவர் மேற் கொண்டு விவரம் எதையும் வெளியிடவில்லை.

ஐக்கிய முன்னணியை அரசு அமைக்க அழைத்தால் இரண்டே நாட்களில் தமது பெரும்பான்மையை அது நிரூபித்து விடும் என்று சமாஜவாதிக்கட்சித் தலைவர் முலாயம்சிங் கூறினார். 61 எம். எல். ஏ. க்களுடன் உள்ள பகுஜன் சமாஜ் கட்சி, 33 காங்கிரஸ் எம். எல். ஏ. க்களின் ஆதரவைப் பெற்று அரசு அமைக்க உரிமை கோருவது நெறியல்ல என்றும் முலாயம் சிங் சொன்னார்.

அடுத்த முதலமைச்சராக செல்வி மாயாவதியை பதவி ஏற்பதையே காங்கிரஸ் இன்னமும் விரும்புவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் குலாம் நபி ஆஸாத் கூறினார். (அ-3)

**உலக அரங்கில்**

### 15 பேர் பலி

இந்திய நிர்வாகத்திலுள்ள காஷ்மீரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோதல்களில் 15 பேர் கொல்லப்பட்டனர் எனவும் 10 வீடுகள் அழிக்கப்பட்டன எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அகதிகள் வசதிகள் பெறுவதற்கு சர்வதேச உதவி மேலும் தேவை

வத்திக்கான், நவ. 5

உலகின் பல பகுதிகளிலும் இடம் பெயரும் அகதிகளுக்கு சர்வதேச சமூகம் உதவி வரும் அதே வேளை அதிகாரிகளின் இன்னல்கள் நீங்க மேலும் பெரியளவில் சர்வதேச உதவிகள் தேவைப்படுகின்றன.

ஐ. நாவுக்கான திருச்சபையின் நிரந்தர பார்வையாளர் பேராயர் றணத்தோ மாக்பீனே இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

இன்று உலகில் 2 கோடியே 60 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற ஏதோ ஒரு காரணத்தில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நிதி உதவி, ஏனைய வாழ்க்கைத் தேவைகள் மற்றும் அரசியல் ரீதியிலான நடவடிக்கை, தத்தமது தாயகத்தில் குடியமர்த்தப் படுவதற்கான ஏற்பாடுகள் போன்றவற்றில் மேலும் கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமாகிறது.

அகதிகள் பற்றிய ஐ. நா. வின் பொதுக் குழுவில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்

# அமெரிக்காவின் 44 ஆம் ஜனாதிபதி பில் கிளிங்டனா? பொப்டோலா?

அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியை இன்று அமெரிக்க மக்கள் தெரிவு செய்யவுள்ளனர்.

இன்றைய தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய அதிபர் பில் கிளிங்டன் போட்டியிடுகிறார். அக்கட்சியின் சார்பில் உதவி அதிபர் பதவிக்கு அல் கோர்போட்டியிடுகிறார்.

குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் பதவிக்கு பொப்டோலும், உப அதிபர் பதவிக்கு ஜாக் கெம்பும் போட்டியிடுகின்றனர்.

சுயேச்சை வேட்பாளராக றொஸ் பெறோ போட்டியிடுகிறார். கருத்துக் கணிப்புகள் அதிபர் பில் கிளிங்டனே மீண்டும் தெரிவாவார் எனத் தெரிவிக்கின்றன.

### அமெரிக்க சுதந்திரப் போர்

அமெரிக்க சுதந்திரப் போரை அடுத்து பிரிட்டனின் ஆசிக்கத்திலிருந்து 13 அமெரிக்க குடியேற்ற நாடுகளும் 4-7-1776இல் சுதந்திரத்தைப் பெற்றன.

1787 இல் குடியேற்ற நாடுகள் எல்லாம் ஒன்றுசேர்ந்த ஓர் ஆட்சியின் கீழ் ஒற்றுமைப்பட்டு ஐக்கிய அமெரிக்க நாடுகள் என அழைக்கப்பட்டன.

13 குடியேற்ற நாடுகளைக் கொண்டதாக அமைந்த ஐக்கிய அமெரிக்க நாடுகள் தற்போது விரிவடைந்து 50 மாநிலங்களைக் கொண்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஒரு சமஷ்டிக் குடியரசாகும். இதில் 49 மாநிலங்கள் வட அமெரிக்க பெருநிலப்பரப்பிலும், 50 ஆவது மாநிலமான ஹவாய் தீவுகள்

## இன்று தேர்தல் நடக்கிறது

அமெரிக்காவுக்கு சுமார் 3200 கிலோ மீற்றர் மேற்கில் பசுபிக் சமுத்திரத்திலும் அமைந்துள்ளது.

49 ஆவது மாநிலமான அலாஸ்காவை ரஷ்யாவிடமிருந்து 1959 இல் அமெரிக்கா விலைக்கு வாங்கியது. அலாஸ்காவும், ஹவாய் தீவுகளும் முறையே 49 ஆவது 50 ஆவது மாநிலங்களாக இணைக்கப்பட்டன.

தேர்தல் மூலம் அமெரிக்க ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். ஜனாதிபதியின் பதவிக் காலம் 4 ஆண்டுகளைக் கொண்டது. ஒருவர் இரு முறைக்கு மேல் ஜனாதிபதி பதவியை வகிக்க முடியாது.

ஜனாதிபதி வேட்பாளர் அமெரிக்காவில் பிறந்தவராகவும் ,35 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும்

> அமெர்க்காவின் 44 ஆவது ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறுகிறது. ஜனநாயகக் கட்சி சார்பில் பில் கிளிங்டனும், குடியரசுக் கட்சி சார்பில் பொப் டோலும் பிரதான வேட்பாளர்களாக தேர்தலில் போட்டியிடுகின்றனர். பில் கிளிங்டனே வெல்லுவார் என்று கடைசியாக எடுக்கப்பட்ட பொதுசன அபிப்பிராய கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.
>
> எனினும் பொதுசன அபிப்பிராய வாக்குக் கணிப்புக்கு எதிர் மாறாக தேர்தல் முடிவுகள் வெளியான சம்பவங்களும் கடந்த கால அமெரிக்க தேர்தல் வரலாற்றில் இருந்து வருகின்றன.

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் அமைந்துள்ள கொலம்பியா தவிர்ந்த ஏனைய மாநிலங்கள் அனைத்தும் தமக்கென அரசியல் அமைப்பைக் கொண்டுள்ளன.

இம்மாநிலங்களின் அரசியற் சட்டம் இரு சட்டசபைகளை உருவாக்க வகை செய்கிறது. ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியான ஆளுநர்களையும் நீதிச் சேவையையும் கொண்டுள்ளன. மத்திய அரசுக்கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களை மாநில அரசுகள் கையாளலாம்.

ஆண்டொன்றுக்கு 2 லட்சம் அமெரிக்க டொலர்கள் அவருக்கு வேதனமாகவும், 50 ஆயிரம் டொலர்கள், ஏனைய செலவுகளுக்கும் வழங்கப்படும்.

### குற்றவிசாரணை பிரேரணை

நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டு வந்து மூன்றில் இரண்டு வாக்குகளால் நிறைவேற்றினால் [illegible] பதவியில் இருக்கும் ஒரு ஜனாதிபதியை அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் பதவியிலிருந்து அகற்றலாம்.

அமெரிக்க வரலாற்றில் இவ்வாறான சம்பவம் ஒரே ஒரு முறை மாத்திரம் இடம் பெற்றுள்ளது. 1868 இல் அன்ட்ரு ஜோன்சன் பதவியிலிருந்து இறக்கப்பட்டார்.

1974 இல் ''வாட்டர்கேற்' விவகாரம் சூடு பிடித்து. விசாரணைக்கு வரு முன்னரே அப்போதைய ஜனாதிபதி றிச்சாட் நிக்சன் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

### கஜனி

பதவியிலிருந்த ஜனாதிபதி ஒருவர் ராஜினாமா செய்த சம்பவமும் இது மாத்திரமே ஆகும். பதவிக்காலத்தில் இறந்த (ரூஸ்வெல்ட்) அல்லது கொல்லப்பட்ட (ஆபிரஹாம் லிங்கன், ஜோன் கென்னடி) ஜனாதிபதிகளைத் தவிர ஏனைய ஜனாதிபதிகள் அனைவரும் தமது பதவிக் காலங்களைப் பூர்த்தி செய்தனர்.

ஐக்கிய அமெரிக்க நாடுகள் உருவாக்கப்பட்ட பின்னர் இதுவரை 43 முறை ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அந்நாட்டின் அரசியல் அமைப்பின்படி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் ஆவார் (1789)

இதுவரை 43 ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்ற போதிலும் 39 ஜனாதிபதிகளே மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். காரணம் 4 ஜனாதிபதிகள் இரு முறை ஜனாதிபதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளதே ஆகும். பிராங்கிளின்டி ரூஸ்வெல்ட் (1932, 1936), ஐசனோவர் (1952, 1956), நிக்சன்(1968 1972), றொனால்ட் றேகன் (1980, 1984) ஆகியோர் இருமுறைகள் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகள் ஆவர். இவர்களில் நிக்சன் தனது 2 ஆவது பதவிக் காலம் முடியு முன்னர் பதவியை ராஜினாமா செய்தார்.

### காங்கிரஸ்

அமெரிக்க அரசியல் பீடமான காங்கிரஸ்; நாடாளுமன்றம், மேல்சபை (செனட்) ஆகிய இரு அமைப்புக்களைக் கொண்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகளாகவும், மேல்சபை உறுப்பினரின் பதவிக்காலம் (செனட்) 6 ஆண்டுகளாகவும் அமையும். இவர்கள் எத்தனை முறைகளும் தெரிவு செய்யப்படலாம். இவர்கள் 30 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் குறைந்தது 9 வருடங்களாவது அமெரிக்க பிரஜையாக இருத்தல் வேண்டும்.

50 மாநிலங்களும் தலா இருவர் வீதம் மேல்சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும். மூன்றில் ஒரு பகுதி மேல்சபை உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படுவர்.

நாடாளுமன்றத்தில் 435 உறுப்பினர்கள் இருப்பர். ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த மாநிலங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு மாநிலமும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இந்த மாவட்டங்கள் கிட்டத்தட்ட ஒரேயளவு சனத்தொகையைக் கொண்டதாக அமையும். இந்த மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரதிநிதியை காங்கிரஸுக்குத் தெரிவு செய்யும்.

### இன்றைய தேர்தல்

இன்று நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி பில் கிளிங்டன் ஜனாதிபதி பதவிக்கும் அல்கோர் உப ஜனாதிபதி பதவிக்கும் ஜனநாயகக் கட்சி சார்பிலும் —

பொப்டோல் ஜனாதிபதி பதவிக்கும் ஜாக்கெம் உப ஜனாதிபதி பதவிக்கும் குடியரசுக் கட்சி சார்பிலும் —

றொஸ் பெறோ ஜனாதிபதி பதவிக்கு சுயேச்சை வேட்பாளராகவும் போட்டியிடுகின்றனர்.

### கருத்துக்கணிப்புக்கு மாறான தீர்ப்பு

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புகளின்படி பில் கிளிங்டனே வெற்றிபெறுவார் எனக் கூறப்படுகிறது. கருத்துக் கணிப்புகள் எல்லாம் எப்போதும் அப்படியே தேர்தல்களில் பிரதிபலிப்பதில்லை. அமெரிக்க ஜனாதிபதிதேர்தல்களில் கருத்துக்கணிப்புகளுக்கு மாறான தீர்வினை அமெரிக்க வாக்காளர்கள் வழங்கிய சந்தர்ப்பங்கள் உண்டு.

1948 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட ஹரி ட்ருமனுக்கு வெற்றி வாய்ப்புகள் எதுவுமே இல்லை எனக் கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன. ஆனால் தேர்தலில் ஹரி ட்ருமனே வெற்றி பெற்றார்.

அதேபோல 1960 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ஜோன். எவ். கென்னடிக்கு வெற்றி வாய்ப்புக்கள் இல்லை என கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன. கென்னடி றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். மேலும் அதுவரை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட வேட்பாளர்களில் வயதில் குறைந்தவர் (43 வயது). அத்தேர்தல் வரை கத்தோலிக்கர் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவில்லை. அத்துடன் ஜனாதிபதி பதவிக்கு வயது முதிர்ந்தவர்களே வழமையாகப் போட்டியிட்டனர். தெரிவு செய்யப்பட்டுமுள்ளனர்.

கருத்துக் கணிப்புக்கு ஆதாவது கென்னடிக்கு வாய்ப்பில்லை என்பதற்கு இக்காரணங்களே அடித்தளமாக அமைந்தன. ஆனால் தேர்தலில் கென்னடியே வெற்றி பெற்றார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஏனையவற்றுடன் வேட்பாளர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, குறைநிறைகள், திறமைகள், பலவீனங்கள், ஆளுமை, தலைமைத்துவம் ஆகியனவும் பரிசீலிக்கப்படுகிறது.

### கிளிங்டனின் பாலியல் விவகாரம்

1992 இல் கிளிங்டன் முதற்தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். அப்போதும் அவருடைய பாலியல் வாழ்க்கை ஆராயப்பட்டது. அப்போது அவரது வயது 43 எனினும் அன்றைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் புதுமுகமான கிளிங்டனிடம் தோல்வியுற்றார்.

இன்றைய தேர்தலில் எப்படியாவது கிளிங்டனைத் தோற்கடிக்க வேண்டும் என்பதில் குடியரசுக் கட்சி முனைப்பாக ஈடுபடுகிறது. இதன் விளைவு கிளிங்டனில் பாலியல் வாழ்க்கை மீண்டும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

''வரம்புக்கு மீறிய எத்தனிப்புகள்'' என்ற பெயரில் வெளிவந்துள்ள நூலில் கிளிங்டனின் பாலியல்விளையாட்டுக்கள் பற்றி விவரிக்கப் பட்டுள்ளது. இருப்பினும் இவ்வாறான தவறுகள் ஆசிய வட்டகையைச் சேர்ந்த ஒரு தலைவரைப் பாதிக்குமளவிற்கு அமெரிக்க வட்டகையில் உள்ள கிளிங்டனைப் பாதிக்காது என்றே கூறலாம்.

கிளிங்டன் கடந்த 4 ஆண்டுகளாக ஜனாதிபதி பதவியில் இருந்துள்ளார். அவர் பதவியேற்ற காலத்தில் இருந்து (1992) தற்போது வரை பின்வரும் விடயங்களில் அமெரிக்கா அடைந்துள்ளமுன்னேற்றங்களே அவர் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவாரா? அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்.

★ ஸ்திரமான பொருளாதார நிலை தொழில் நுட்ப மேம்பாடு.

★ கிளிங்டன் கூறுவது போல் அவர் ஒரு கௌரவமான தலைவர் என்பதை உலகம் ஏற்றுக் கொண்டுள்ளதா?

★ அமெரிக்க மக்களின் வாழ்கைத் தரம் சமூகப் பாதுகாப்பு சீரடைந்துள்ளனவா?

★ ஏனைய நாடுகளின் உள்விவகாரத்தில் தேவையற்ற விதத்தில் அமெரிக்கா தலையிட்டுள்ளதா?

### உலக வல்லரசாக அமெரிக்கா

முதலாம் உலக மகாயுத்தத்தில் பங்கு பற்றி அதன் நேசநாடுகள் வெற்றி பெற உதவியதால் அமெரிக்கா வல்லரசாகியது.

2 ஆவது உலக மகாயுத்தத்தின் முடிவு, அமெரிக்காவை உலக மகா வல்லரசுகளில் ஒன்றாக உருவாக்கியது.

ரஷ்யக் குடியரசுகள் சின்னாபின்னமானதைத் தொடர்ந்து இன்று உலகில் அமெரிக்கா தான் ஒரே ஒரு வல்லரசு. உலகின் பொலீஸ் காரனும் அதுவே. இவை யாவற்றுக்கும் காரணம் அந்நாட்டில் இயற்கையாக அமைந்துள்ள வளங்கள், கனிமங்கள் தொழில் அபிவிருத்திகள். தொழில் நுட்ப முன்னேற்றங்கள் ஆகும்

ஒரு புறத்தில் உதவி வழங்குதல் என்ற போர்வையில் அமெரிக்கா ஏழை நாடுகளை அடிமைப்படுத்துகிறது அல்லது விலைக்கு வாங்குகிறது. மறு புறத்தில் ஆயுத பலத்தால் அச்சுறுத்துகிறது. அல்லது ஜனநாயகத்தின் பாதுகாவலன் என்ற போர்வையில் அந்நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு அந்நாடுகளில் தனது கையை ஓங்கச் செய்கிறது.

கல்வியறிவு குறைந்த நாடுகளில் நடக்கும் பொதுத்தேர்தல்களில் 60 வீதத்தில் இருந்து 90 சத வீதமான வாக்காளர்கள் வாக்களிக்கிறார்கள்.

ஆனால் கல்வியிலும் ஏனைய வசதிகளிலும், ஜனநாயகக் கோட்பாடுகளிலும் நம்பிக்கை கொண்டுள்ள அமெரிக்காவில் 1972 ஆம் ஆண்டுக்குப் பின் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் எந்தவொரு தேர்தலிலும் 28 சத வீதத்துக்கும் மேலாக மக்கள் வாக்களிக்கவில்லை.

1972 க்குப் பின்னர் ஜனாதிபதியாக எந்தவொரு ஜனாதிபதியும் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளில் 20 சத வீதத்துக்கும் மேலாக வாக்குகளைப் பெறவில்லை.

தனது சொந்த நாட்டு வாக்காளர்களில் 20 சத வீதமானவர்களின் ஆதரவைக் கூடப் பெறாத ஒருவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாவதும் அவரே உலகத்தின் பொலீஸ் காரனாவதும், ஜனநாயகத்தின் காவலனாக விளங்குவதும் உலகின் தலைவிதியை நிர்ணயிப்பதும் ஜனநாயகத்திற்கு ஒரு சவால் ஆகும். ★

# வவுனியா வரும் அகதிகள் பிரச்சினை எரியும் பிரச்சினையாக மாறுகிறது

## கொழும்புப் பத்திரிகை ஆசிரிய தலையங்கம்

வவுனிய வரும் அகதிகளின் பிரச்சினை ஓர் எரியும் பிரச்சினையாக மாறி வருகிறது.

இப்படி கொழும்பில் இருந்து வெளிவரும் அரச சார்பு தினகரன் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:

வவுனியாவுக்கு இடம் பெயர்ந்த மக்கள் தடுப்பு முகாம்களில் பல கஷ்டங்களைச்சந்திப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சூரிய பிரகாசம் இராணுவ நடவடிக்கையால் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்த மக்களும், உண்மை வெற்றி இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களும் இயல்பு வாழ்க்கையை தேடி வவுனியாவில் உள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வேறு இடங்களுக்கு செல்லவும் வருகிறார்கள்.

பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்பது நியாயமானதே. அதற்காக மக்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்தும் வகையில் கர்ண கடூரமான கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது,

கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கள் தான் இவ்வாறான கட்டுப்பாடுகளை ஏற்படுத்த அரசை நிர்ப்பந்தித்திருக்கின்றன என்பதை தமிழ்மக்கள் மறக்கக் கூடாது

அதற்காக தமிழ் மக்கள் கஷ்டங்களைச் சந்திக்க அதிகாரிகள் அனுமதிக்கக் கூடாது.

வவுனியாவுக்கு வரும் வடபகுதி மக்களின் பிரச்சினை ஓர் எரியும் பிரச்சினையாக மாறிவருகின்றது.

தமிழ் மக்களைப் பாதிக்காத வகையிலும் — தென் இலங்கையில் குண்டுத் தாக்தல்களை தவிர்க்கக் கூடிய வகையிலும் —வவுனியாவுக்கு இடம் பெயர்ந்து வருபவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## விடுமுறை டிச 10ல்

இவ்வருட இறுதித் தவணைக்காக சகல பாடசாலைகளும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி மூடப்படவுள்ளன.

ஏற்கனவே 12 ஆம் திகதி பாடசாலைகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

## குடாநாட்டின் கல்வி நிலை பாதிப்பு

கொழும்பு, நவ. 5

யாழ். மாவட்டத்தின் கல்வி நடவடிக்கைகள் மிக மோசமாகச் சீர்கேடு அடைந்துள்ளன என்றும் —

அங்குள்ள பாடசாலைகள் தற்போது பெயரளவிலேயே இயங்கி வருவதாகவும் — வடபகுதி கல்வித்திணைக்கள அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 481 அரசாங்கப் பாடசாலைகளில் தற்போது 378 பாடசாலைகளே இயங்கி வருவதாகவும் —

மொத்தமுள்ள ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 350மாணவர்களில் சுமார் 87 ஆயிரம் மாணவர்கள் மட்டுமே தற்போது பாடசாலைகளுக்குச் சென்று வருவதாகவும் — அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் 6 ஆயிரத்து 400 ஆசிரியர்கள் கடமையாற்றினர். (இ-3)

## தொடக்க நிலை கல்வி கருத்தரங்கு

கல்விக் கோட்டங்களில் கடமை புரியும் தொடக்க நிலை கல்வி தொடர்பான உயர்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சேவைக்கால பயிற்சி ஆலோசகர்கள் ஆகியோருக்கான தொடக்க நிலைக் கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் 7 ஆம் திகதி கல்வி அமைச்சின் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

மாகாண நிலைகளில் தொடக்க நிலை கல்வி மேம்பாட்டின் சிக்கல்களை இனம் கண்டு அவற்றுக்கான பரிகாரங்களை எடுக்கவும் —

அதற்கான திட்டங்களை தீட்டி அமுலாக்கம் செய்து மூன்று வருட காலத்துள் அந்த இலக்கை அடையவும் — இப்பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு வடக்கு — கிழக்கு மாகாண கல்வி—பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. (இ-152)

## அமரர் சுந்தரலிங்கத்துக்கு ஒரு நண்பனின் அஞ்சலி

### அமரர் வை. சுந்தரலிங்கம்

*[பிரதிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்), யாழ்ப்பாணம்.]*

சுந்தரும் யானும் ஒரே நாளில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையேற்றோம். அன்றைய உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் குழாமினர் மாணவர்களை மட்டுமன்றி இளம் ஆசிரியர்களையும் ''வளர்த்தெடுக்கும்'' வல்லமையையும், மனப்பாங்கையும் கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள். திறமையைப் பகிரங்கமாக மெச்சுவதன் மூலம் தட்டிக் கொடுக்கும் சுபாவமுள்ள குழாமென்றின் நடுவிலிருந்து செயற்படும் வாய்ப்புக் கிடைப்பதரிதே. பிசாசு என்றாலும் பங்கு அதற்குரியதாயின் அதனை மறுக்காதே என்ற மனப்பக்குவத்தை இயற்கையாகவே பெற்றிருந்த அமரர், அக்குழாமின் தளபதி ஆவதற்கு வேறு எதுவும் தேவைப்படவில்லை.

ஓர் ஆசிரியருக்கு அவசியமான தகைமைகள் பலவற்றுள் அத்தியாவசியமானது வாண்மைக்குப் பொருத்தமான நடைச் செவ்வி (Temperance, இல்லையெனின் அது பழியார்ந்த தொழிலாக மாறிவிடும். கிடைத்தற்கரிய இக் குணவியல்பைக் கொடையாகப் பெற்றவர் அமரர்.

கல்வியையும் கற்றலையும் தனது வாழ்நாள் தோற்றப் பாடாகக் கொண்டிருந்தவர் அமரர். முழு உலகையும் ஓர் ஆய்வுகூடமாகவும், அதில் உள்ளனவெல்லாம் கல்விக்கான சாதனங்களெனவும் கண்டவர் அவர். படித்தறிவானது பட்டறிவின் பின்னணியில் எங்ஙனம் பிரதிபலிக்கின்றது என்பதை அவர் பரீட்சித்த வண்ணமிருந்தார். அதனால் அவரின் அனுபவங்கள் தொடர்ந்து மீளமைக்கப்பட்ட வண்ணமும் புனரமைக்கப்பட்ட வண்ணமுமிருந்தன. அறிவின் துரித வளர்ச்சியுடன் தன்னை எந்நேரமும் சமாந்தரப்படுத்திக் கொள்ளும் அவரின் ஆர்வமும் ஆற்றலும் திறனும் மற்றவர்கள் கற்கவும் ஐயம் போக்கவும் உதவும் நுண்மாண் புலங்களாகப் பரிணமித்திருந்தன அவருடன் கதைத்த போதெல்லாம் இரண்டொரு விடயங்களையாவது புதிதாகக் கற்கத் தவறியவர் எவருமிருக்கமாட்டார். சிறிது தூண்டி விட்டாலோ அவரின் மெய்யறிவு (Wisdom) கொழுந்து விட்டு ஒளிர்வதைக் கண்டிருப்பர். அதன்போது வாழ்க்கையின், கல்வியின் மிக ஆழமான விடயங்கள் பற்றிய புதிர்கள் வெளிவந்து மற்றவர்களுக்கு விருந்தாக அமைந்தன.

கற்பித்தல் - கற்றல் தொழிற்பாட்டின் உள்ளும் புறமும் தீர ஊசாடியதால் ஆசிரியர்களின் தேவைகளை மட்டுமன்றி மாணவர்களின் தேவைகளையும் அறிந்தவர் அமரர். இருபாலாரினதும் அவகாச எல்லைகளும் அவருக்குப் புலனாகியிருந்தன. உயிரியல் துறையில் எந்தவொரு பாடப்பரப்பையும் பம்பரமாகச் சுழற்றக் கூடிய துறையாதிக்கம் மட்டுமன்றி தனித்துவமான பணியாதிக்கமும் பெற்றவர். பாடவிதானம், பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறைகள், பாடநூல்கள், பரீட்சைகள், பாடசாலைகள் ஆகியனவற்றின் சிறப்பான, முனைப்பான அம்சங்களை மட்டுமன்றி அவற்றில் நிலவும் தொய்வுகளையும் வெற்றம்சங்களையும் பட்டறிந்தவர் ஆவர். யதார்த்த நிலையறிந்து உள்ளத்தால் பொய்யாது ஒழுகியதால் ஆற்றலும் திறனும் அமோக வரவேற்பும் மிக்க கல்விப்பணிப்பாளராக அவர் திகழ்ந்தார்.

இன்னும் பல பதுமன்கள் கல்வித்துறையின், குறிப்பாக விஞ்ஞானக் கல்வியின், வளர்ச்சிக்கு ஒப்பற்ற மூல வளங்களைக் கொண்ட சுரங்கமாகத் தொழிற்பட வேண்டிய வைத்திலிங்கம் சுந்தரலிங்கம் அவர்களின் மறைவு ஈடில்லா இழப்பே.

ஒருவர்பற்றி, அவருக்கும் மற்றவர்க்கும் தெரிந்த விடயங்களுள; அவருக்குத் தெரிந்த ஆனால் மற்றவர்க்குத் தெரியாத விடயங்களுள; அவருக்குத் தெரியாத ஆனால் மற்றவர்க்குத் தெரிந்த விடயங்களுள; அவருக்கோ மற்றவர்க்கோ தெரியாத விடயங்களுள;. எவருக்கும் தெரியாதனவெல்லாம் தெரிந்த அப்பரம் பொருளுடன் அன்னாரின் ஆத்மா கலந்து நின்று அவரது அன்புப் பாரியாருக்கும், அருமைப் பிள்ளைகளுக்கும், உற்றார்க்கும், நண்பர்க்கும் நல்வழிகாட்டுவதாக.

(சி/3460) படியாதவன் பி. கே. பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### கடல், ஆகாய மார்க்கமாகத் தரையிறங்கி

# 'ராடர்' நிலையத்தைக் கைப்பற்றிய படைக்கு ஆச்சரியம் காத்திருந்தது

யாழ். குடா நாட்டின் பெரும் பகுதியை ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகள் கைப்பற்றியதை அடுத்து, குடாநாட்டிலிருந்து வெளியேறிய விடுதலைப் புலிகள் அவ்வப்போது வேகப்படகுகள் மூலம் குடாநாட்டுக் கரையோரப் பகுதிகள் ஊடாக குடாநாட்டுக்குள் ஊடுருவி வருகின்றார்கள்.

சுண்டிக்குளம் பகுதியிலிருந்து வேகப்படகுகளில் புறப்பட்டு குடாநாட்டின் கிழக்குப் பக்கமாக நாகர் கோயில் மற்றும் கரைகளில் வந்து அவர்கள் இறங்குகின்றார்கள்.

அரசுப் படைகள் பூநகரி முகாமைக் கைவிட்ட பின்னர் குடாநாட்டின் மேற்குப் பக்கத்தாலும் இத்தகைய ஊடுருவல் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

பூநகரித் தளத்தை அரசுப் படைகள் கைவிட்ட சில தினங்களுக்குள்ளாகவே விடுதலைப்புலிகள் அப்பிரதேசத்திலிருந்த நிலக்கண்ணி மற்றும் வெடிகளை அகற்றி அப்பிரதேசத்தை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பூநகரியிலிருந்து தென் கிழக்குத் திசையில் உள்ள நல்லூர் பகுதியில் பாரிய கடற்புலிகளின் தளம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

இதுவரை காலமும் குடாநாட்டின் கிழக்குப் பக்கத்தால் குடாநாட்டுக்குள் ஊடுருவி வந்த புலிகளுக்கு இத் தளம் அமைக்கப்பட்டதை அடுத்து மேற்குப்பக்கத்திலிருந்தும் கடல் வழியாக ஊடுருவுவது இலகுவாயிற்று என்பதைப் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொள்கின்றன.

புலிகள் குடாநாட்டின் கிழக்குப் பக்கமாக ஊடுருவுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சுண்டிக்குளம் பூனைத் தொடுவாய் ராடர் நிலையத் தளமே ''ஒப்பரேஷன் டிரித்தர நடவடிக்கையின் இலக்காயிற்று.

★ ★ ★

**'ஒப்பரேஷன் டிரித்தர' ஆரம்பம்**

தாக்குதல் திட்டம் தயாரானதை அடுத்து கடந்த ஒக்ரோபர் 20ஆம் திகதி காலை விடியும் நேரம்...

அநுராதபுரம் தளத்தில் இருந்து ஆர்ஜென்ரீனாவின் புக்காரா விமானங்கள் எரிபொருளை நிரப்பி, குண்டுகளை நிறைத்துக்கொண்டு புறப்பட்டன...

இஸ்ரேல் தயாரிப்பு 'கிபிர் ஜெட் விமானங்கள் கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் எரிபொருளை நிரப்பிக்கொண்டு குண்டுகளை ஏற்றிக்கொண்டு வானைக் கிழித்துப் புறப்பட்டன...

ஸ்ரீலங்கா விமானப்படையின் ஆறாவது ஹெலிகொப்டர் ஸ்குவாட்ரனைச் (அணியைச்) சேர்ந்த ரஷ்ய தயாரிப்பு எம். ஐ. 17 ரக ஹெலிகள் வவுனியாவிலிருந்து இராணுவ விசேட படையணிக் கொமாண்டோக்களை ஏற்றிக்கொண்டு விரைந்தன...

## பகுதி - 3

அதேசமயம் கடற்படையின் விசேட படகுத் தாக்குதல் அணியின் கொமாண்டோக்களும், இராணுவ விசேட படையணியின் கொமாண்டோக்களுமாகச் சுமார் நூற்றைம்பது பேரை ஏற்றிக் கொண்டு ''வோட்டர் ஜெட்'' எனப்படும் கண்ணாடியிழையிலான தரையிறங்கு ரோந்துப் படகுகள் இரண்டு — சுமார் 40 அடி நீளமானவை — நீலக்கடலைக் கிழித்துக் கொண்டு காங்கேசன்துறைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டன...

அதேநேரத்தில் றியர் அட்மிரல் டி. ஜே. தஸநாயக்க தலைமையிலான கட்டளைப் பணியகம் பறக்கும் விமானத்தில் இருந்தவாறு — குடாநாட்டுக்கு மேல் பறந்தவாறு — செயற்படத் தொடங்கியது......

நேரம் காலை மணி ஏழு. 'ஒப்பரேஷன் டிரித்தர' சுமுகமாக ஆரம்பமானது.

★ ★ ★

**சுண்டிக்குளம் கடற்கரையில்**

'வோட்டர் ஜெட்' படகுகள் கரையை நெருங்க ஆரம்பித்தன. படகிலிருந்த கொமாண்டோக்கள் வைத்திருந்த ஜி பி.எம். ஜிக்களும், 'வோட்டர் ஜெட்' படகுகளில் பொருத்தப்பட்டிருந்த கிரனேட் லோஞ்சர்களும் கரையை இலக்கு வைத்து காத்திருந்தன. படையினரின் விரல்கள் அவற்றின் 'ட்ரிகரில்' தயார் நிலையில் இருந்தன — எந்த நேரமும் முழங்கத் தயாராக.

புலிகளுக்கு எதிர்பாராத வகையில் - ஆச்சரியத்தில் ஆழ்த்தும் - தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்த படைகளுக்கு கரையை நெருங்க, நெருங்க பதற்றம் அதிகரிக்க ஆரம்பித்தது.

கடற்கரையின் ஆழம் குறைந்த மணல்பாங்கான பகுதியில் 'வோட்டர் ஜெட்' படகுகள் தரைதட்டின; எதிர்ப்பு ஏதும் இல்லை.

படகுகளில் இருந்த கொமாண்டோக்கள் ஆழம் குறைந்த தண்ணீரில் ஒவ்வொருவராகக் குதித்து இறங்கத் தொடங்கிய போதும் வேறு ஆரவம் இல்லை.

**ஆச்சரியம் யாருக்கு?**

அதுவரை எதிர்ப்புக் கிட்டாததால் தங்களது அதிரடித்தாக்குதல் புலிகளுக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தரப்போவது நிச்சயம் என கொமாண்டோக்கள் எண்ணிக்கொண்டு தமது நடவடிக்கையைத் துரிதப்படுத்தியபோதுதான் அவர்களை அதிர்ச்சியிலும், ஆச்சரியத்திலும் வீழ்த்திய அந்தச் சம்பவம் நடந்தது.

படகுகளிலிருந்து கடைசி ஒரு கொமாண்டோக்கள் தரையிறங்க முயற்சிக்கையில் காலை நேர அமைதியைக் கிழித்துக் கொண்டு திடீரென பெரும் சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது. அடுத்து தொடர்ந்து முழக்கங்கள். தரையிறங்கிய கொமாண்டோக்களை நோக்கி கரையிலிருந்து ஆர். பி. ஜிக்கள், கிரனேட் லோஞ்சர்கள், இயந்திரத் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின.

படகுகளில் வந்திறங்கிய கொமாண்டோ அணியின் கட்டளைத் தளபதியும், இந்தப் படை நடவடிக்கைக்கு சூத்திரதாரியாக விளங்கியவருமான லெப்டினன்ட் கொமாண்டர் வருண கலகே 'வோட்டர் — ஜெட்' படகிலிருந்து தரையிறங்க முயற்சித்த சமயம் கரையிலிருந்து வந்த வேட்டு ஒன்று அவரது இடுப்பைத் துளைத்தது. அவர் நீருக்குள் சரிந்து வீழ்ந்தார்.

அவர் மீட்கப்பட்டபோது உயிரிழந்து காணப்பட்டார். கடற்படையின் சிறந்த நீச்சல் வீரரான கலகே நீரில் மூழ்கி மரணமானார்.

கடற்படையின் விசேட படகு அதிரடி கொமாண்டோ படைப்பிரிவில் லெப்டினன்ட் இந்திகா நிஷாத் உட்பட மேலும் நான்கு கொமாண்டோக்கள் அங்கு உயிரிழந்தனர்; மற்றும் இருவர் காணாமல் போயினர்; இருபது பேர் வரை காயமடைந்தனர்.

**'வோட்டர் ஜெட்' உருகி அமிழ்ந்தது**

ஒன்றரை அடித் தண்ணீரிலும் — லாவகமாக — அதிவேகமாக — செலுத்தப்படக் கூடிய நவீன தாக்குதல் படகான — 'வோட்டர் ஜெட்' ஒன்று புலிகளின் ஆர்.பி.ஜி. தாக்குதலுக்கு இலக்காகி உருகி நாசமானது. படகில் ஆர். பி. ஜியின் றொக்கட் பட்டு வெடித்ததும் அது 3500' சென்ரிகிரேட் வெப்ப நிலைக்கு உயர்ந்து உருகிப் போனதாக இராணுவ ஆய்வாளர் ஒருவர் சொன்னார்.

மற்றைய 'வோட்டர் ஜெட்' தாக்குதல் படகும் புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலில் சிறிது சேதமடைந்தது.

41 அடி நீளமான 'வோட்டர் ஜெட்' படகு ஒன்றை இழந்ததும், மற்றையது சேதமுற்றதும் கடற்படை மற்றும் விசேட இராணுவப் படையணி கொமாண்டோக்களை அதிர வைத்த போதிலும் — அவற்றை இழந்த

### தொகுப்பு: கவி

நிலையில் — இடையில் திரும்புவதற்கு வேறு வழியில்லாததால் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் படையணி 'ராடர்' நிலையத்தை நோக்கி நகர முயன்றது.

★ ★ ★

**ஹெலி மூலம் தரையிறங்கிய 'கொமாண்டோக்கள்'**

சுண்டிக்குளம் கடற்கரையில் கடல் வழியாகத் தரையிறங்கிய துருப்புகள் மீது புலிகள் நடத்திய தாக்குதலும் அதனால் ஏற்பட்ட களேபரமும் ஒரு புறம் நிகழ்ந்து கொண்டிருக்க அதேசமயம் —

சுண்டிக்குளத்துக்குத் தெற்கே சற்றுத் தொலைவில் விமானப்படையின் எம். ஐ. 17 ரக ஹெலிக்கொப்டர்கள் இராணுவ விசேட படையணி கொமாண்டோக்களைக் கொண்டு வந்து தரையிறக்கிக் கொண்டிருந்தன.

**ஹெலிகள் சேதம்**

மூன்று ஹெலிகள் ஒன்றாக துருப்புக்களைத் தரையிறக்கிய போது அவற்றை நோக்கி புலிகள் திடீரென இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் தாக்குதல் நடத்தினர்.

மூன்று ஹெலிகளில் ஒன்று பெரும் சேதமடைந்தது. மற்றைய இரண்டும் சிறிய சேதங்களுக்கு உள்ளாகின. எனினும் விமானிகள் அந்த மூன்று ஹெலிகளையும் ஒருவாறு சமாளித்து அருகிலிருந்த வெற்றிலைக் கேணி இராணுவத் தளத்தில் தரையிறக்கினர்.

இதே வேளை —

பூனைத்தொடுவாய்க்குத் தெற்கே, சாலைநல்ல தண்ணீர் தொடுவாய் ஆகிய பகுதிகளில் இருந்த இரு கடற்புலிகளின் தளங்களை நோக்கி கிபிர் ஜெட் விமானங்கள், புக்காரா குண்டு வீச்சு விமானங்கள், ரஷ்யத் தயாரிப்பு எம். ஐ. 24 ஹிண்ட் ரக ஹெலிக்கொப்டர்கள் குண்டு மாரி பொழிந்த வண்ணம் இருந்தன.

**ஆகாயத்தில் கட்டளைப் பணியகம்**

விமானத்தில் — ஆகாயத்தில் பறந்தவாறு — இயங்கிக் கொண்டிருந்த கட்டளைப் பணியகத்திலிருந்து முப்படை உயரதிகாரிகளும் தத்தமது தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் களத்தில் படைநடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தத்தமது படைகளுக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தனர்.

கடல் வழியாகத் தரையிறக்கப்பட்ட துருப்புகளுக்கு, கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது புலிகளின் 'ராடர்' நிலையத்தை நோக்கி முன்னேறும் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதே வேளை, ஹெலிக்கொப்டர்கள் மூலம் சுண்டிக்குளத்துக்கு தெற்கே தரையிறக்கப்பட்ட இராணுவக் கொமாண்டோக்களில் ஒரு பகுதியினரை அப்பகுதியில் பிரிந்து நின்று நிலையெடுத்துத் தரித்து நிற்கும்படியும் —

புலிகளின் 'ராடர்' நிலையத்துக்கு மேலதிக மீட்பு உதவிகள் வருவதைத் தடுத்து நிறுத்தும்படியும் —

மற்றைய பகுதியினரை புலிகளின் ராடர் நிலையத்தை நோக்கி முன்னேறும் படியும் —

கட்டளைப் பணியகத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கட்டளைப் பணியக உத்தரவுப்படி படைகள் முன்னேறின. புலிகளின் பூனைத் தொடுவாய் ராடர் நிலையத்தைத் திட்டமிட்டபடி கைப்பற்றின.

ஆனால் அங்கு அவர்களுக்கு அதிர்ச்சி தரும் ஆச்சரியம் காத்திருந்தது. அது என்ன?

விவரம் நாளைய உதயனில்!

(வளரும்)

---

# பிரிட்டிஷ் டாக்டர்களின் சேவையை தூதரிடம் கோருகிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், நவ. 05

''யாழ். போதனா வைத்திய சாலையும், அதனோடு இணைந்த யாழ். மருத்துவ பீடமும் வைத்திய நிபுணர்கள் இன்றி பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. எனவே அதனைப் போக்க பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்களின் சேவையை யாழ். ஆஸ்பத்திரிக்கு வழங்கி உதவ வேண்டும்.''

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதுவர் ராட்ஹாமிடம் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இக் கோரிக்கையை விடுத்தார்.

பிரிட்டிஷ் தூதுவரிடம் அவர் விடுத்த ஏனைய முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ கல்வி நிலை குன்றியுள்ள தற்போதைய நிலையில் தமிழ் மக்களின் விஞ்ஞான, தொழில்நுட்ப, மருத்துவ துறைகளின் மேம்பாட்டுக்கு உதவ வேண்டும்.

★ பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி, கல்லூரிகள் ஆகியவற்றில் தொழில் நுட்ப கல்வியை மேம்படுத்த கணனிகள் வழங்கி உதவ வேண்டும்.

★ ஆய்வுகூடங்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்க வேண்டும்.

★ பல்கலைக் கழக ஆசிரியர் பற்றாக் குறையை நீக்க ஆசிரியர்களை [illegible] போன்றவற்றை வழங்க பிரிட்டன் முன்வர வேண்டும்.

(உ-3)

---

# வெள்ளவத்தைப் பகுதியில் மூன்று தமிழர்கள் கைது

கொழும்பு, நவ. 5

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் உட்பட பலரை இரகசியமாக கனடாவுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் மூன்று தமிழ் கோடீஸ்வரர்கள் கடந்த முதலாம் திகதி கொழும்பு விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்ட இந்த மூன்று தமிழர்களும் கனடா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்றும் —

இவர்களிடமிருந்து ஆறு போலிக் கடவுச் சீட்டுக்கள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பின் வெள்ளவத்தையையும் தாய்லாந்தின் பாங்கொக் நகரையும் மையமாகக் கொண்டு இந்த நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொண்டு வந்தனர் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒருபக்கம் கண்ணாடி கொண்ட முதிரை அலுமாரி வேறுசில வீட்டுப் பொருள்கள் விற்பனைக்குண்டு தொடர்பு நுணாவில் சந்தி ஸ்ரீ கோணேஸ் கடை. (சி-3459)

நல்ல நிலையில் உள்ள ரயர் வண்டில், Singer குளிர்சாதனப் பெட்டி ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வி. சந்திரமதி 22/10 புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (43496)

### தவறிவிட்டது

துணிகளும் வேறு பொருள்களுடனும் அடங்கிய பார்சல் தாவடிக்கும் சுதுமலை அம்மன் கோவிலுக்குமிடையில் 28 - 10 - 96 (திங்கள்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ந. பத்மதேவா, ''மகேச பவனம்'' இணுவில் றோட், மானிப்பாயில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறேன். (43495)

அருளப்பு சண்முகம் ஆகிய எனது 551521575 V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை கடந்த 26-10-96ல் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தோர் 424, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (43487)

பொ. கப்பலோட்டியதமிழன் ஆகிய எனது 622964350 V இலக்க அடையாள அட்டை மீசாலை, சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி, நவீன சந்தை, செல்வம் குளிரருவியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-3462)

பாலச்சந்திரன் செல்வகுமார் ஆகிய எனது அடையாள அட்டை கச்சாய்க்கும் மீசாலைக்குமிடையில் 01-11-96 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி, நவீன சந்தை, செல்வம் குளிரருவியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-3461)

### புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரரி (Ling-Lending Library), இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (48084)

### மாறிய சைக்கிள்

25 - 10 - 96 அன்று கோண்டாவில் டிப்போவுக்கு முன்னால் உள்ள சோதனை முகாமில் எனது ஏசியா சைக்கிளை தவறுதலாக மாறி எடுத்துவிட்டார். அவருடைய சைக்கிள் என்னிடம் உள்ளது. எடுத்திவர்கள் சு. சண்முகசுந்தரம், இராச வீதி, கோப்பாய் மத்தி என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (43490)

## பதவி உயர்வு நேர்முகப் பரீட்சை

வலிகாமம் தெற்கு, நவ. 5

வடக்கு — கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட அரச திணைக்களங்கள், பிரதேச மற்றும் கல்வித் திணைக்களங்கள் போன்றவற்றில் அரசபணியாளர்களாக சேவையாற்றுபவர்களுக்கான வகுப்பு 1, 2 க்கான பதவி உயர்வு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட உள்ளன.

இப்பரீட்சைக்கு தகுதி வாய்ந்த பணியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பமுடிவுத்திகதி இம்மாதம் 8 ஆம் திகதி ஆகும். (இ- 152)

---

# கண்ணீர் அஞ்சலி

## பத்மநாதன் ரட்ணகுமார்

(கணனித்துறை மாணவன் - IIs)

அவர்களது அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், துன்பமும் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்;

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

Institute of Informatics Studies
(68 - Clock Tower Road, Jaffna)

(43493)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## அமரர் மார்க்கண்டு சங்கரலிங்கம்

(சாமியார்)

புவியதனில்: 1919–11–15
இறையதனில்: 1996–10–06

ஆண்டது தாது புரட்டாதி ஈர்பத்தில்
பூண்ட அபரத் தசமியில் —மாண்புடையன்
பாசமிலாச் சாமியார் சங்கர லிங்கமவன்
ஈசனடி சேர்ந்தான் இசைந்து.

எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 05-11-96 இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்ச்சியிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

மனைவியும்; மகன் சோதிலிங்கம்
குடும்பத்தினரும்.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(43462)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

05–11–1996

மலர்வு: 08 — 10 — 1940



உதிர்வு: 05 — 11 — 1995

## அமரர் நோபல் செல்வச்சந்திரன்

(சந்திரா)

(முன்னாள் உத்தியோகத்தர், இலங்கை வங்கி)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (5-11-96) காலை 11 மணி அளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஞாபகார்த்த ஆராதனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

உம்மை என்றும் மறவா
அன்புத்தாய்
கனகம்மா செல்லையா
குடும்பத்தினர்.

21/2 ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(43450)

---

# INSTITUTE of INFORMATICS STUDIES

68, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எமது கல்வி நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் இன்று (05-11-1996) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் நிறுவனத்தில் தவறாது ஒன்றுகூடவும்.

— Director

(43494)

---

# WELCOME

TO

New Principal

**Mrs. T. RAJARATNAM**

[B. Sc (Madras) Dip. - in Ed. (Sri Lanka) M. A. in-Ed. Sri Lanka)]

AND

New Deputy Principal

**Mrs. A. ALOYSIUS**

[B. Com. Dip. - in. Ed. (Sri Lanka.) ]

OF

## CHUNDIKULI GIRLS' COLLEGE

**Mrs. T. Rajaratnam**

Our sincere bestwishes and congratulations on your election as Principal to our prestigious school. It is challenging and a demanding reward for your dynamic leadership qualities.

**Mrs. A· Aloysius**

Our whole hearted appreciation and congratulations to you for being elected as the Deputy Principal. It is really the reward for the past loyal and genuine service rendered for education.

We wish you all the best.

We pray the almighty to help you both to carry-out assigned duties efficiently, effectively and impartially for the best acheivements of the School.

Dr. and Mrs. V. Thiyagarajah
(Parents)
Medi Aids,
Nallur.

(43491)

---

# 1ஆம் ஆண்டு நினைவு நாள்



எமது தந்தையார்

## அமரர் மூ. சி. சீனித்தம்பி B.A, J.P

(யா/தேவரையாளி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர்)

தோற்றம்: 11–04–1920
மறைவு: 18–10–1995

சாதனையின் மனிதமணி சான்றோன் மறைந்தென்ன
மூதறிஞன் சேவையவரை யொருநாளும் மறைக்காது.

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

''பிரசாந்தி''
வதிரி

(43419)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. கவிடம் மன மாற்றம்?

அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துக்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாகச் செயற்படக் கூடிய சூழ் நிலை உருவாகி வருவதாகச் சொல்லப்படுகிறது. இது குறித்து அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் பிரஸ்தாபித்திருக்கிறார்.

அதிகாரப் பரவல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐ. தே. கட்சி தடையாக இருக்கக் கூடாது என்ற மன நிலை அக்கட்சியின் உயர்மட்டங்களில் உருவாகி வருவதாகவும் அந்தச் சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டிருக்கும் தகவல் சரியானதாக இருக்குமெனின் நல்ல அரசியல் மாற்றம் ஒன்று நிகழும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழர் விவகாரத்தை, தெற்கில் ஆட்சியில் உள்ள கட்சியும் எதிர்க் கட்சியும் தமக்கு அரசியல் லாபம் தேடும் வாக்கு வங்கியைப் பெருக்கும் பண்டமாகவே — முதலீடாகவே — இதுவரை பயன்படுத்தி வந்தன. அந்த நிலைப்பாட்டில் இருந்து மாற வேண்டும் என்ற மனப்பக்குவம் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு உண்டாகியிருப்பின் அதனை அனுகூலத்திற்கான ஆரம்பம் எனக் கொள்ளலாம்.

தேசியப் பிரச்சினைகளில் கூட அரசியல் போட்டியும், அரசியல் இலாபம் தேடும் முயற்சியும் கைக்கொள்ளப்பட்டதால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைப் பாடமாகக் கொண்டு, ஐ தே. கட்சியின் புதிய தலைமைத்துவம் செயற்பட முனைவது வரவேற்கத்தக்கது,

தமது கட்சிக்கு எதிராக அரசியல் வன்முறைகளை அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளதாகவும், கட்சித் தலைமைத்துவத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அது மேற்கொண்டு வருவதாகவும் ஐ. தே. கட்சி குற்றஞ்சாட்டி வரும் காலம் இது.

அதற்கு மத்தியிலும், தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், அது திறந்த மனத்துடன் செயற்பட முனைந்துள்ளது என்பது உண்மையானால், அது பாராட்டப்பட வேண்டியதாக அமையும்.

தமிழர் விவகாரம் இன்றைய நாட்டின் எரியும் பிரச்சினையாகச் சுவாலை கக்குவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் பழைய தலைமைத்துவங்கள் தீமூட்டின என்பதனை இன்றைய தலைமைத்துவம் உள்ளூர உணர்ந்து விட்டதா...?

எப்படியோ, ஐக்கிய தேசியக் கட்சியின் மனதில் மாற்றம் ஏற்பட்டிருந்தால், அரசியல் செயற்பாடுகளைப் புதிய புதிய அணுகு முறைகளில் பார்க்கும் தன்மைக்கு மாறியிருந்தால், அது தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கப்பட வேண்டியதே.

எனினும் —

அரசின் அதிகாரப் பரவல் திட்டத்துக்கு ஐ தே. கட்சி ஆதரவளிக்க முனைவது பயனுள்ளதாக இருக்க வேண்டுமெனின், ஒற்றையாட்சி அரசு முறையை ஒழித்தல், வடக்கு – கிழக்கு மாகாணத்தைப் பிரிக்காதிருத்தல் என்ற இரு முக்கிய அம்சங்களுக்கும் அது ஆதரவளித்தாக வேண்டும்.

இல்லையேல், நியாயமான தீர்வு ஒன்று எட்டப்படுவது இதுவரை இருந்ததுபோலவே, எட்டாப் பழமாகவே உயரத்தில் தொங்க நேரிடும்!

# பயிலுநர் ஆசிரியரின் விவரங்களை கல்வி அமைச்சு கோருகிறது

## நிரந்தரமாக்க வசதியாக

கொழும்பு, நவ. 5

பயிலுநர் ஆசிரியர்களின் முழு விவரங்களையும் உடனடியாகக் கல்வி, உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு சகல பயிலுநர் ஆசிரியர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பி. ஜி. தயாரத்னவுக்கு தங்களது விவரங்களை இரண்டு வாரங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு கல்வி, உயர் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

கல்வித் தகைமை, தற்போது கடமையாற்றும் பாடசாலை, பதவி வகித்த காலம், பெற்ற அதி உயர் கல்வித் தகைமை போன்ற முழு விவரங்களையும் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவர்களது கல்வித் தகைமை விவரங்களை ஆராய்ந்து இவர்களுக்குக் கல்வி, உயர் கல்வி அமைச்சு நிரந்தர நியமனம் வழங்கவிருப்பதாக அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி அனுதாபம்

கொழும்பு, நவ. 5

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் மறைவையொட்டி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். (இ-4)

## கண்டியில் மின்மாற்றி திடீரெனத் தீப்பற்றியது

### நகரில் பதற்றம்

கண்டி தலதா வீதியும், டி. எஸ். சேனநாயக்கா வீதியும் சந்திக்கும் முச்சந்தியில் பொருத்தப்பட்டிருந்த மின்மாற்றி ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தது.

இதனால் நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

மின்மாற்றி தீப்பற்றியதற்கான காரணம் உடன் தெரிவிக்கப்படவில்லை.

இது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன. (இ-3)

## இந்திய ஆய்வாளர்களின் உதவியுடன் குப்பையைப் பசளையாக்க மட்டுநகரில் முயற்சி

மட்டக்களப்பு, நவ. 5

மட்டக்களப்பு மாநகர சபைப் பகுதியில் வீசப்படும் குப்பையை பத்திரப்படுத்தி பின்னர் அதைப் பாகுபடுத்தி உரமாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டு. மாநகரசபை கிழக்குப் பல்கலைக்கழக விவசாயப் பீடத்துடன் இணைந்து இந்த முயற்சியில் ஈடுபடவிருக்கிறது.

இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள இந்தியாவின் பம்பாய், டில்லி ஆகிய மாநிலங்களில் இருந்து ஆய்வாளர்களை அழைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (-3)

## வரவு - செலவுத் திட்டம் நாளை சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ. 5

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் மூன்றாவது வரவு — செலவுத் திட்டம் நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவிருக்கிறது.

நீதி அரசமைப்பு விவகார அமைச்சரும், பதில் நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் வரவு— செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றுவார்.

இந்த வரவு செலவுத் திட்ட யோசனைகள் குறித்து விளக்கும் விசேட நாடாளுமன்ற குழுக் கூட்டம் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றது

## கட்டுநாயக்க விமானநிலைய பார்வையாளர் கூடம் திறப்பு

கொழும்பு, நவ. 5

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பார்வையாளர் கூடம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்காரணங்களால் பல காலமாக மூடப்பட்டிருந்த பார்வையாளர் கூடம் மீண்டும் பொதுமக்கள் செல்ல வசதியாக கடந்த வாரம் திறக்கப்பட்டுள்ளது.

அநாவசிய பொதிகளையும், பயணப்பைகளையும் கொண்டு வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் —

தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், கடவுச்சீட்டு போன்ற ஆவணங்கள் பரிசோதனை செய்யப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பற்றைக்குள் அநாதரவாக விடப்பட்டிருந்த குழந்தை

### பொலீஸ் நிலையத்தில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் பொலித்தீனில் சுற்றப்பட்ட நிலையில் பற்றை ஒன்றில் இருந்து குழந்தை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான திருமதி சுதா என்பவர் தமது வீட்டுக்கு பின்னால் உள்ள பற்றை ஒன்றில் இருந்து இக்குழந்தையை மீட்டு சுன்னாகம் பொலீஸில் கடந்த 25 ஆம் திகதி ஒப்படைத்திருந்தார்.

சுன்னாகம் பொலீஸார் இது குறித்து விசாரணை நடத்தி அப்பெண்ணை யாழ். மாவட்ட பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

யாழ்ப்பாணத்தில் குழந்தைகள் பாதுகாப்பு நிலையம் தற்சமயம் இல்லாத காரணத்தாலும் —

அக்குழந்தையைப் பராமரிக்க அப்பெண் விரும்பியதாலும்— குழந்தையை தற்காலிகமாக அப்பெண்ணிடம் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டு மேலும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுன்னாகம் பொலீஸாருக்கு உத்தரவிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விசாரணையை ஒத்தி வைத்தார். (இ-3-ரி)

## திருகோணமலையில் சர்வதேச விளையாட்டரங்கு

திருகோணமலை, நவ. 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சர்வதேச விளையாட்டரங்கு ஒன்று திருகோணமலையில் நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

ஒரு கோடியே 32 லட்சம் ரூபா செலவில் இந்த விளையாட்டு மைதானத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மைதானம் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் விளையாட்டு வீரர்களுக்கான மத்திய நிலையமாக இருக்கும். (3)

## மருந்து தட்டுப்பாடு

மன்னார் மருத்துவ மனையில் மருந்து வகைகளின் கையிருப்பு பெரும்பாலும் தீர்ந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## திருமலை கைதிகள் தப்ப படையினர் தவறே காரணம்!

### இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 5

திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து சிறைக் கைதிகள் தப்பிச் செல்வதற்கு பாதுகாப்புதரப்பில் ஏற்பட்ட தவறுகள் குறித்து அறிவதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோகான்தலுவத்த தெரிவித்தார்.

சிறைக் கைதிகள் தப்பிச் சென்றதற்கு முக்கிய காரணமாகவிருந்த இராணுவக் கோப்ரல் தப்பிச் சென்ற கைதிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளார் என்றும்—

இச் சம்பவத்துக்குக் காரண கர்த்தாக்களாக இருந்த ஏனைய இராணுவ அதிகாரிகள் பற்றி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தவறு பாதுகாப்புப் பிரிவினர் தரப்பிலேயே என்றும் அவர் கூறினார். (இ-3)

## நாளை

ஐப்பசி 21
புதன்கிழமை
திதி: தசமி
காலை 7.02 வரை.
நட்சத்திரம்: பூரம்
முன்இரவு 8.20 வரை.
ராகுகாலம்: 12.05 -1.35
சுபநேரம்: 4.35 -6.05
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## அரச அலுவலகங்களும் சாதாரண பொதுமக்களும்

உதயன் 27 - 10 – 1996 இதழில் ''வாசகர் திருமுகம்'' பகுதியில் புத்தூரைச் சேர்ந்த திரு. ஜெ. தற்பரன் என்பவர் எழுதிய சில கருத்துக்களில் ''இன்றைய சூழ்நிலையில் அரச அலுவலகங்களில் ஏதாவது ஒரு கருமத்தைச் செய்வித்துக் கொள்வதென்பது மிகக் கஷ்டமாகவே உள்ளது என்று பொது மக்கள் கவலைப்படுவதில் நியாயம் இல்லாமல் இல்லை" என்று குறிப்பிட்டிருந்தார்.

இக்கருத்தில் சில உண்மைகள் இருந்தபோதிலும் இக்கருத்து முற்றாகச் சரி என்றும் ஏற்றுக்கொள்ளமுடியாது .ஒரு சில அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளை ஆதாரமாக வைத்து, எல்லா அரச உத்தியோகத்தர்களிலும் குற்றம் காண்பது நியாயம் அற்றது ஆகும்.

தற்போது பல அரச அலுவலகங்கள் நிரந்தரமான கட்டிடங்கள் சேதம் அடைந்த நிலையில் தனியார் வீடு போன்றவற்றில் தற்காலிக அலுவலகங்களை நடத்தி வருகின்றன. மிகவும் வசதிக்குறைவான சூழ்நிலையில் உத்தியோகத்தர்கள் அங்கு கடமையாற்றுவது மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற நோக்கத்திற்காகவேயன்றி கூலிக்கு மாரடிப்பதற்காக அல்ல என்று உணர்வதே நியாயம்.

**வாசகர் திருமுகம்**

மேற்படி வாசகரின் கருத்திலும் சில உண்மைகள் இருப்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஒரு கையொப்பம் பெறுவதற்காகவே பொதுமக்கள் 2 அல்லது 3 நாள்களுக்கு அரச அலுவலகங்களுக்கு மாறி மாறி அலைவதும், மக்களை அலுவலகத்திற்கு உள்ளே வரவிடாது படிக்கட்டில் நிற்கவைத்து பதில் சொல்லி அனுப்புவதும் சில அரச அலுவலகங்களில் நடைபெறுகின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது.

சாதாரண பொதுமக்கள் விடயத்தில் மிகவும் இறுக்கமாகப் பிடிக்கப்படும் சட்டங்கள் அறிமுகமானவர்களைக் கண்டவுடன் சிறிது தளர்த்தப்படுவதும் உண்டு.

சில அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற நல்ல மனப்பான்மை உள்ளவர்களாக இருந்தபோதிலும், அலுவலகங்களில் அவர்கள் அமர்ந்திருக்கும் கதிரையானது அவர்களின் இயற்கையான குணவியல்புகளை மாற்றிவிடுவதும் உண்டு.

அரச உத்தியோகத்தர்களும் சாதாரண மக்களே என்பதை எப்பொழுதும் மனத்திலிருத்தி ஒவ்வொரு மனிதரும் மற்றைய மனிதர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு கருமமாற்றுவது சிறந்ததாகும்.

அ. கந்தமனோகரன்
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக நியமனம் பெற்றிருக்கும்

### திருமதி தேவபுஷ்பம் இராஜரட்ணம்

(B.Sc; Dip in Edu.,M A. in Edu (Sri Lanka)

அன்பையும் பண்பையும் அறனாக வளர்த்திட்டு தியாகத்தையும் விசுவாசத்தையும் பொக்கிஷமாய்க் கொண்டு
பணி செய்து வாழ்ந்திடும் தேவபுஷ்பம் இராஜரட்ணமே பிணி நீங்கிப் பெருவாழ்வு வாழவே வாழ்த்துகின்றோம்!

— திருமதி விஜிதி கருணானந்தன்

23/10, Jeya Road
Colombo — 04

(43510)



## யூப்பிட்டர் கல்வி நிலையம்,

சாவகச்சேரி.

விஞ்ஞானப் பயிற்சி வினாத்தாள்கள்

### மீட்டல் அலகுகள்

1) வெப்பம்
2) சுவாசத் தொகுதி
3) சமிவகற்றல்
4) மின்னின் விளைவுகள்
5) இலத்திரனியல்

தொகுப்பு:
ஆசிரியர்: திரு. த. பரமேஸ்வரன்

★ பிரதிகள் சொற்பமே! முந்துங்கள்!! (சி/3467)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் பாலசிங்கம்

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் பொன்னம்பலம் பாலசிங்கம் (உரிமையாளர், விமலா ஸ்ரோர்ஸ், 275, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்) 03-11-96 இல் காலமானார்.

இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், காந்திமதி, பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (U.S A), றதிமதி (லண்டன்), வசந்தமதி (லண்டன்), காலஞ்சென்றவர்களான பாக்கியராசா (றவி), இந்துமதி, சாந்திமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராசா (ஓய்வு பெற்ற பிரதம எழுது வினைஞர்), பவானி (ஜேர்மனி), வசந்தி (U. S. A), சபாநாதன் (லண்டன்), றவீந்திரநாதன் (லண்டன்), யோகநாதன் (வடபிராந்திய போக்குவரத்துச்சபை) ஆகியோரின் மாமனாரும், சுபோதினி (லண்டன்), மேனகா (பொறியியல்துறை 1 ஆம் வருடம் பேராதனை பல்கலைக்கழகம்), கிருசாந்தி (ஜேர்மனி), பார்த்தீபன் (ஜேர்மனி), விதுரன் (ஜேர்மனி), றம்யா (U.S A), தமிழினி, (U.S A), விபீஸ் (லண்டன்), அருண் (லண்டன்), ஜனனி (லண்டன்), கவுசல்யா (லண்டன்), அபிராமி (லண்டன்), துஸ்யந்தன் (மாணவன் பரியோவான் கல்லூரி), லக்சிலா (மாணவி சுண்டிக்குளி மகளிர்கல்லூரி) ஆகியோரின் பேரனும், ஸனகாம்பிகை, காலஞ்சென்றவரான சின்னராசா (M.P.S பிரபல வர்த்தகர்) ஆகியோரின் சகோதரனும் ராசலட்சுமி (பவளம் லண்டன்), பாக்கியம், விசுவறட்ணம் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்), சற்குருநாதன் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் துயரத்துடன் அறியத்தருவதோடு அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரத்தை பின்னர் அறியத் தருகிறோம்.

தகவல்:
கி. சிவராசா
(மருமகன்)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(43503)

### சு. சீவரத்தினம்

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சு. சீவரத்தினம் 4-11-96 இல் காலமானார்.

அன்னார் விசாலாட்சியின் அன்புக் கணவரும், கணேசதாஸ், சிவானுஜா. யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (5-11-96) செவ்வாய்க்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் அச்சுவேலி தெற்கு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி. கணேசதாஸ்
(மகன்)

அச்சுவேலி தெற்கு.
அச்சுவேலி.

(43505)

## வெளியேற 4,019 பேருக்கு அனுமதி

தாண்டிக்குளத்தில் தடை நீக்கப்பட்டபின் வன்னிப் பகுதியிலிருந்து இதுவரை வவுனியா வந்து சேர்ந்த 12ஆயிரத்து 469பேரில் 4ஆயிரத்து 19பேர் நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாணம் செல்வதற்காக திருகோணமலைக்கு அனுப்பப்பட்ட ஆயிரத்து 385பேரும் அடங்குவர் என வவுனியா அரசாங்கஅதிபர் திரு.கே.கணேஷ் தெரிவித்தார். (இ-4)

## வெங்காயம் கிலோ 20க்கு கொள்வனவு

யாழ். மாவட்ட விவசாயிகளிடம் இருந்து தரமான வெங்காயத்தை ப. நோ கூ. சங்கங்கள் மூலம் கிலோ 20 ரூபாய்ப்படி யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்துதல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கொள்வனவு செய்யும்.

ஒவ்வொரு சங்கமும் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யக்கூடிய வெங்காயத்தின் அளவைச் சமர்பிக்குமாறும் —

வெங்காய உற்பத்தியாளர்களிடம் இருந்தே வெங்காயம் கொள்வனவு செய்யப்படுகிறது என்பதை ப. நோ. கூ. சங்கங்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும்— சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் நாட்டில் ரஷ்ய உதவியுடன் அணுசக்தி உலை

புதுடில்லி, நவ. 5

தமிழ் நாட்டின் கூடன்குளம் நகரில் 2 ஆயிரம் மெகாவாட் அணுசக்தி உலை ஒன்றை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை இந்தியாவும், ரஷ்யாவும் செய்துள்ளன.

முன்னாள் சோவியத்யூனியன் ஜனாதிபதி கோர்பச்சேவ் இந்தியாவுக்கு 1988ஆம் ஆண்டு விஜயம் செய்த போது இந்த அணுசக்தி உலைத் திட்டத்தை நிர்மாணிப்பதற்கு கால் கோளிடப்பட்டிருந்தது. (இ-3)

### மத்தியில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது.

உத்தரப்பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி அமைக்குமானால் அதற்கான முழுப்பொறுப்பையும் ஐக்கிய முன்னணியே ஏற்க வேண்டும் என்று நேற்றுக் கூடிய காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

செயற்குழுக் கூட்டம் ஆறரை மணி நேரம் நீடித்தது.

[இ-10]

### 18 ஆம் திகதி—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பான சாட்சிகள் நால்வர் நீதிமன்றத்துக்கு நேற்று வந்திருந்த போதும் சாட்சியங்கள் பதியப்படவில்லை.

இவ் வழக்குத் தொடர்பாக 9 இராணுவத்தினரும், 2 பொலீஸாரும் கைது செய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

மாவட்ட நீதிபதி ந. அருன்சாகரன் இருவார லீவில் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-3-ரி)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## மகாபொல கொடுப்பனவு 93/94 கல்வியாண்டுக்கானது

பின்வரும் கல்வியாண்டு மாணவர்களுக்கான மேற்படி மகாபொல கொடுப்பனவுகள் யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஒழுங்குகள் உரிய அட்டவணைப்படி செய்யப்பட்டு உள்ளன.

| | கல்வியாண்டு | தவணைப்பணம் | திகதி |
|---|---|---|---|
| i | 93/A, 93/BAD, 93/C | 4 – 10 | 06 - 11 - 96 + 07 - 11 - 96 |
| ii | 93/FM, 92/FM, 91/FM, 90/FM, 89/FM | 10 ஆவது தவணைப் பணம் | 08 - 11 - 96 + 11 - 11 - 96 |
| iii | 93/SB, 93/SP | 4 – 10 | |
| iv | 89/SID, 90/SID, 91/SID | 8 – 10 | 12 - 11 - 96 + 13 - 11 - 96 |
| | 93/SID | 1 – 10 | |

— பதிவாளர்

(சி/3465)



## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

போரூட், பருத்தித்துறை.

யாழ். பல்கலைக்கழக புதிய கல்வியாண்டிற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கின்றன.

B. Com. III 2-II-96 காலை 9 மணி (தொடங்கி விட்டது)

B A II / B Com II ] 9-II-96

B A I / B Com I ] 16-II-95

ஏற்கனவே G. A Q. First in Com. வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன.

நிர்வாகத்தினர்

(43484)


## மரண அறிவித்தல்

### கந்தன் நாகன்

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொக்குவில் மேற்கில் வசித்தவருமாகிய கந்தன் நாகன் காலமானார்.

இவர் காலஞ் சென்ற முத்துவின் அன்புக் கணவரும், செல்வராசா, நல்லையா, வில்வராசா, காலஞ்சென்ற தம்பிராசா ஆகியோரின் தந்தையும், செல்வா, றோசம்மா, செல்வமணி ஆகியோரின் மாமனாரும் ஆவார் இவரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.11.96) நடைபெற்று பூதவுடல் ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மயானததில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
நா.வில்வராசா (மகன்)
(N. R. S லொறி உரிமையாளர்)

வராகி அம்மன் கோயில்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(43499)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்


## 120 ஆவது ஆண்டு நிறைவினைக் காணும் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

சிறப்புற வாழ்த்துகிறோம்.

★ 05 — 11 — 96 காலை நன்றிப்பலியிலும், ஆண்டு விழாவிலும் கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம்.

— பழைய மாணவர் சங்கம்—

விளம்பர அமைப்பு: இரத்தினா ஸ்ரோர்ஸ், 287, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(43480)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2, இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05 - 11 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.